இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 19 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 11 – திங்கள்கிழமை 28 ஆகஸ்ட் 2023 – சென்னை 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 19: Thiruvalluvar Year - 2054 - Aavani 11 - Monday 28 August 2023 - Chennai 12 + 8 Pages ₹ 5.00


## ஊழலைப் பற்றி பேச பா.ஜ.க.வுக்கு அருகதை உண்டா? மோடி ஆட்சியின் மெகா ஊழல்

# ரூ.7,50,000 00 00 000!

## சி.ஏ.ஜி.யின் அதிர வைக்கும் அறிக்கையை சுட்டிக்காட்டி

## நாகை எம்.செல்வராஜ் எம்.பி. இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் குற்றச்சாட்டு!

**திருவாரூர், ஆக. 28 -**

**மோடி ஆட்சியில் ரூ.7,50,000 00 00 000 (ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் கோடி ரூபாய்) மெகா ஊழல் நடைபெற்றுள்ளது. எனவே, ஊழலைப் பற்றி பேச பா.ஜ.க.வுக்கு அருகதை உண்டா? என்று சி.ஏ.ஜி.யின் அதிரவைக்கும் அறிக்கையை சுட்டிக்காட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாகை எம்.செல்வராஜ் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் குற்றம் சாட்டியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (27.08.2023) திருவாரூர் மாவட்டம், பவித்திரமாணிக்கத்தில் நடைபெற்ற நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் இல்லத் திருமண விழாவுக்குத் தலைமையேற்று ஆற்றிய உரை வருமாறு:-

இங்கு நன்றி உரை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் அவர்களும், நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் அன்புக்குரிய முத்தரசன் அவர்களும், இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு நான் வந்திருப்பதை சுட்டிக்காட்டி, நாங்கள் கேட்டதும் தேதியைத் தந்து எந்தவித மறுப்பேதும் சொல்லாமல் வந்திருக்கிறேன் என்று பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.08.2023) நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ் மகள் செல்வப்பிரியா – விக்னேஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், கே.மாரிமுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள்.கோ.பழனிச்சாமி, சிவபுண்ணியம், திருமதி பத்மாவதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

நான் தட்டாமல் இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு வந்ததற்கு காரணம், மண்ணின் மைந்தர் என்ற காரணம் ஒரு பக்கம் இருந்தாலும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்களைப் பொறுத்தவரைக்கும், அவர் அன்போடு - பண்போடு - பாசத்தோடு என்னிடத்தில் மட்டுமல்ல, எல்லோரிடத்திலும் பழகக்கூடியவர்.

**நாகை மாவட்டத்திற்கு ஒளியாகவும் மதியாகவும் இருக்கிறார் செல்வராஜ்!**

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆனதற்குப் பிறகு, பல்வேறு மாவட்டங்களுக்கு - பல்வேறு பகுதிகளுக்கு - அரசு நிகழ்ச்சிகளுக்கு - கட்சி நிகழ்ச்சிகளுக்கு - பொது நிகழ்ச்சிகளுக்கு செல்கின்ற நேரத்தில் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு திருமண நிகழ்ச்சி இருந்தால் அதில் நான் பங்கேற்பது உண்டு.

ஆனால் இந்த நிகழ்ச்சியை பொறுத்த வரைக்கும் நானே மனமுவந்து இந்தத் தேதியை அவரிடத்தில் வழங்கி இந்தத் தேதியைப் பயன்படுத்திப் பல நிகழ்ச்சிகளுக்கு ஒப்புதல் தந்து மூன்று நாட்களாக இந்த டெல்டா மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். ஆனால் நடந்து முடிந்திருக்கும் இந்தத் திருமண நிகழ்ச்சியில் மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்ந்து நான் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

நாகை மாவட்டத்திற்கு ஒளியாகவும், மதியாகவும் இருக்கிறார் நம்முடைய செல்வராஜ் அவர்கள். 1975இல் இருந்து தன்னை இந்த இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைத்துக் கொண்டு ஏறக்குறைய 48 ஆண்டுகாலமாக இந்த இயக்கத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பல பொறுப்புகளில் பணியாற்றியவர்!**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர், நாகை, திருவாரூர் மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளர், நாகை மாவட்டக் கழகத்தின் செயலாளர், மாநில நிர்வாகக் குழுவின் உறுப்பினர், தேசிய குழுவின் உறுப்பினர் - இவ்வாறு பல்வேறு பொறுப்புகளில் இருந்து இயக்கப் பணி - பொதுப் பணி - மக்கள் பணி ஆற்றியிருப்பவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள்.

தற்போது கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினராக, AITUC-யின் மாநிலத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் சீரான பொருளாதார வளர்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 28 -**

**கொரோனாவுக்கு பிந்தைய காலத்தில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையான விலைவாசி அடிப்படையில் 8 சதவீதமாக இருந்து வருவதாகவும், ‘திராவிட மாடல்’ ஆட்சியில் சீரான பொருளாதார வளர்ச்சியை கண்டுவருவதாகவும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளதை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார்.**

தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் வழிகாட்டுதலுடன், மாநில பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை சார்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்த நடவடிக்கையின்போது சேகரிக்கப்பட்ட தரவுகளின் ஆய்வு முடிவுகள் வெளியாகி உள்ளன. இதன்படி, 2011–2012 நிதியாண்டு முதல் கொரோனாவுக்கு முந்தைய காலம் வரை மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்ற இறக்கங்களுடன்



5 புள்ளி 80 சதவீதமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ள ஆய்வு முறைகளின்படி மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறித்த விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது வெளியாகி உள்ள தகவல்களின்படி, நிலையான விலைகளின் அடிப்படையில், 2022–2023 நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 14 லட்சத்து 53 ஆயிரத்து 321 கோடி ரூபாயாகும், வளர்ச்சி விகிதத்தில் இது 8 புள்ளி 19 சதவீதமாகும்.

தற்போதைய விலைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 23 லட்சத்து 64 ஆயிரத்து 514 கோடி ரூபாயாகும், வளர்ச்சி விகிதத்தில் இது 14 புள்ளி 16 சதவீதமாகும். மேலும், 2022 – 2023ல் நிலையான விலைகளின் அடிப்படையில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7புள்ளி24 சதவீதம் என்றும், தற்போதைய விலை



'Tamil Nadu's economic growth increased to 8% at constant prices in 2021-22, 2022-23'

களின் அடிப்படையில் இது 14 புள்ளி 16 சதவீதம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021– 2022 ஆம் ஆண்டில், தற்போதைய விலையில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மகாராஷ்டிரா முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன. 2022 –2023 நிதியாண்டின் பொருளாதார நிலை குறித்து பல மாநிலங்களின் ஆய்வறிக்கைகள் வெளியாகாததால், பிறமாநிலங்களுடன் தமிழ்நாட்டை ஒப்பிடும் வகையிலான விவரங்கள் தயாரிக்கப்படவில்லை என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2021–2022 மற்றும் 2022–2023ல் அகில இந்திய அளவிலான பணவீக்கம் 9புள்ளி 31சதவீதம் மற்றும் 8 புள்ளி 82 சதவீதமாக இருந்த நிலையில், தமிழ்நாட்டின் பணவீக்க குறியீடு 2021–2022ல் 7புள்ளி 92 சதவீதமாகவும், 2022–2023ல் 5 புள்ளி 97 சதவீதமாகவும் இருந்தது என்றும் இந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ‘இந்து’ ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது..

இதற்கிடையே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:–

**பெரும் பெருமிதத்துடன் தேசிய சராசரியை விஞ்சிய வளர்ச்சி! நமது ‘திராவிட மாடல்’ அரசு தமிழ்நாட்டைப் புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்கிறது. நமது அயராத முயற்சிகள் 2021-2022 மற்றும் 2022-2023 ஆண்டுகளில் 8% எனும் சிறப்பான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை உறுதிசெய்து, இந்தியப் பொருளாதாரத்தின் ஆற்றல்மிகு மையமாகத் தமிழ்நாட்டை நிலைநிறுத்தியுள்ளன.**

**நடப்பு விலையில் 2022-2023 ஆண்டுக்கான நமது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ( GSDP) 14,53,321 கோடி ரூபாயாக உயர்ந்து, 2030க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்னும் நமது இலக்கை நோக்கிய பயணத்துக்கு அடித்தளம் அமைத்துள்ளது.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 28-08-2023

# இந்திய நாட்டுக்கும்.. தமிழ் இனத்துக்கும்...

நிலவில் இறங்கிவிட்டது இந்தியா. சந்திரயான் விண்கலத்தின் லேண்டரானது வெற்றிகரமாக நிலவில் இறங்கிவிட்டது. இந்திய விண்வெளித் துறையின் மகத்தான மாபெரும் சாதனைகளில் ஒன்று கடந்த 23 ஆம் நாள் நிகழ்த்தப்பட்டு விட்டது.

**“உலகின் கனவுலகம்தான் நிலவு. பூமியின் வாழும் மனிதன், நிலவிலும் வாழ முடியுமா என்ற கற்பனையில் ஆழ்ந்திருக்கிறான். உலக நாடுகளுக்கு, நாடுகளைப் பிடித்தலை விட நிலவை அறிதல் மிகப்பெரிய வேலையாகவே எல்லாக் காலமும் இருந்துள்ளது. நிலவு குறித்த ஆராய்ச்சியும் நிலவுக்கு விண்கலம் செலுத்தி நிலவை முழுமையாக அறிதலும் - தெளிதலும் மிகவும் ஆர்வம் மிக்க துறையாகவே இருந்து வருகிறது. சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் வரிசையில் இதோ இந்தியாவும் கால் பதித்து விட்டது. இந்தச் சரித்திர சாதனையை சந்திரயான் செய்து விட்டது.**

நிலவைத் தொட்ட நான்காவது நாடு இந்தியா. 1959 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமும், 1964 ஆம் ஆண்டு அமெரிக்காவும், 2013 ஆம் ஆண்டு சீனாவும் இந்த சாதனையைச் செய்துள்ளன. 2008 ஆம் ஆண்டு நிலவை நோக்கிய பயணத்தைத் தொடங்கிய இந்தியா, 2023 ஆம் ஆண்டில் சாதனையின் எல்லையை அடைந்திருக்கிறது. மற்ற நாடுகளுக்கு இல்லாத சிறப்பு, இதுவரை அறியப்படாத நிலவின் தென் துருவப் பகுதியை சந்திரயான் - 3 தரையிறங்கி ஆராயத் தொடங்கி இருப்பதுதான்.

மற்ற நாடுகள் நிலவை ஆய்வு செய்வதை விட, இந்தியா தனது ஆராய்ச்சியைத் தொடங்கியது மிக அவசியமானது. ஏனென்றால் இங்குதான் நிலவைப் பற்றிய கற்பனைகள் அதிகம். நிலவை பாம்பு விழுங்குவதால் கிரகணம் ஏற்படுவதாக நம்பப்பட்ட நாடு இது. இங்கேதான் இதுபோன்ற ஆய்வுகள் அதிகம் தேவைப்படுகின்றன.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமானது தனது மகத்தான சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் நாள் பி.எஸ்.எல்.வி.சி. - 11 ராக்கெட் விண்ணில் (சந்திரயான் 1) செலுத்தப்பட்டது. இது முதன்முதலாக நிலவின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்தது. நிலவில் தண்ணீர் இருப்பதாக கண்டறிந்தது. சந்திரயான் - 2 2019 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டது. இதில் நிலவைச் சுற்றி வருவதற்கான தொழில் நுட்பங்கள் இணைக்கப்பட்டு இருந்தன. ஆனால் அந்த தொழில் நுட்பம் கைகொடுக்கவில்லை. நிலவின் தரையில் மோதி செயல் இழந்தது.

சந்திரயான் - 3 தயாரிக்கும் திட்டத்தில் நமது அறிவியல் அறிஞர்கள் இறங்கினார்கள். நிலவின் மேற்பரப்பில் இறங்கி ஆய்வு செய்வதற்கான லேண்டரும் ரோவரும் இதில் இணைக்கப்பட்டது. நிலவை நோக்கிய இதன் பயணம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டது. சூலை 14 ஆம் நாள் தொடங்கிய இந்த நிலவுப் பயணம், ஆகஸ்ட் 23 ஆம் நாள் இலக்கை அடைந்துவிட்டது. நிலவில் இறங்கிய நான்காவது நாடு என்றும் - நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்றும் இந்தியா பெருமை கொள்கிறது. இந்திய நாட்டு மக்கள் அனைவரும் பெருமை பொங்கச் சொல்லிக் கொள்ள வேண்டிய நிகழ்வாகும் இது.

இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் தலைவணங்கத் தக்கது. சுதந்திர இந்தியாவில் அணு சக்தித் துறைதான், அறிவியல் துறையாக தொடக்கத்தில் இருந்தது. இதில் விண்வெளி அறிவியலையும் ஒரு துறையாக இணைக்கக் காரணமாக இருந்தவர் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு அவர்கள். 1961 ஆம் ஆண்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டே டாக்டர் விக்ரம் சாராபாய் தலைமையில் தனிக்குழு உருவாக்கப்பட்டுவிட்டது. திருவனந்தபுரம் அருகே தும்பா ஏவுகளம் அமைக்கும் முயற்சிகள் முதலில் தொடங்கியது. 1963 ஆம் ஆண்டு முதல் ராக்கெட் ஏவப்பட்டது. விண்வெளியில் முதல் பயணம் இதுதான். பிரதமர் இந்திராகாந்தி ஆட்சி காலத்தில் 1969 ஆம் ஆண்டு இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமாக இது பெரும் வளர்ச்சியை அடைந்தது. அணுசக்தி துறையில் இருந்து பிரித்து, விண்வெளித் துறையின் கீழ் கொண்டுவந்ததும் பிரதமர் இந்திராகாந்திதான். விண்வெளி ஆணையத்தையும் இவர் உருவாக்கிக் கொடுத்தார். இதன் காரணமாக சொந்தமாக ராக்கெட், செயற்கைக் கோள் தயாரிக்கும் நாடாக இந்தியா வளர்ந்தது. உயர்ந்தது. உயரத்துக்கு போய்விட்டது இந்தியா.

**இதில் தமிழ் இனத்துக்கு என்ன பெருமை என்றால் சந்திரயான் - 1 திட்டத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டவர் மயில்சாமி அண்ணாதுரை. 2008 அக்டோபர் 28 ஆம் நாள் அது நிலவைச் சுற்றத் தொடங்கியது. நிலவில் நீர்க்கூறுகள் இருப்பதை இதுவே கண்டறிந்து சொன்னது.**

**சந்திரயான் - 2 ஆனது 2019 சூலை 15 ஆம் நாள் ஏவப்பட்டது. இதன் திட்ட இயக்குநராக வனிதா முத்தையா செயல்பட்டார். அந்தக் காலக்கட்டத்தில் இஸ்ரோ தலைவராக இருந்தவர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த சிவன்.**

**இப்போது ஏவப்பட்டது சந்திரயான் - 3. இதன் திட்ட இயக்குநர் வீரமுத்துவேல். “நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் விழுப்புரத்தில்தான். அரசுப் பள்ளியில் 10ம் வகுப்பு வரை படித்தேன். பள்ளியில் நான் ஒரு ஆவரேஜ் மாணவன். அடுத்து எங்க படிக்கணும், என்ன படிக்கணும் என்பது குறித்து எந்த ஒரு ஐடியாவும் எனக்கு இல்லை. அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினர் யாரும் படித்தவர்கள் இல்லை. நண்பர்களுடன் சேர்ந்து டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினிரிங் சேர்ந்தேன்.” என்று சொல்லி இருக்கிறார் வீரமுத்துவேல்.**

**இது தமிழ் இனத்தின் பெருமையாகும். தாய்மொழியில் படித்து, விண்ணுக்கு உயர்ந்தவர்கள் இவர்கள். ‘தமிழ்நாட்டு கல்வி முறை சரியில்லை’ என்று சில தற்குறிகள் சொல்லி வரும் நிலையில் நிலவில் சாதிப்பதன் மூலமான அறிவு கொண்டது தமிழ்நாட்டுக் கல்வி முறை என்பதை நிரூபிக்கும் வாய்ப்பாகவும் இது அமைந்துவிட்டது.**

இந்திய நாட்டுக்கும் தமிழ் இனத்துக்கும் பெருமை சேர்க்கும் நிலவுப் பயணம் தொடரட்டும். கற்பனைக் கதைகள் முடியட்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.08.2023) நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் மகள் செல்வப்பிரியா–விக்னேஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர். இரா. முத்தரசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன். கே.மாரிமுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கோ.பழனிச்சாமி, சிவபுண்ணியம், பத்மாவதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## ‘இதயம் காப்போம்’ திட்டத்தின் வாயிலாக

# கடந்த இரண்டு மாதங்களில் - 1721 பேர் பயனடைந்துள்ளனர்!

### மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

நாகர்கோவில், ஆக. 28 - ‘இதயம் காப்போம்’ திட்டத்தின் வாயிலாக கடந்த இரண்டு மாதத்தில் 1721 பயனாளிகள் பயனடைந்துள்ளனர் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் பி.என். ஸ்ரீதர், தலைமையில், நாகர்கோவில் மாநகர மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் நேற்று (27.08.2023) நாகர்கோவில் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியில் துறை சார்பில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றியும், புதிய கட்டி டங்களுக்கு அடிக்கல் நாட்டி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது :



கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.90 இலட்சம் மதிப்பில் 1735 சதுர அடியில் தரை மற்றும் முதல் தளங்களுடன் 100 நோயாளிகளுடன் இருப்பவர்கள் தங்கும் அறையினையும், ரூ.60 இலட்சம் மதிப்பில் கணபதிபுரம் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடத்தினையும், ரூ.50 இலட்சம் மதிப்பில் இடைக்கோடு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய - வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், ரூ.30 இலட்சம் மதிப்பில் உடையார்விளையில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.2 கோடி மதிப்பில் 2840 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் ஆயுர்வேத மருந்து செய் நிலைய கட்டிடத்திற்கும், ரூ1.10 கோடி மதிப்பில் ஆறுதேசம் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.6 கோடி மதிப்பில் 32 படுக்கைகள் மற்றும் 2 அறுவை சிகிச்சை அரங்கம் கொண்ட கட்டிட பணிகள், ரூ.50 இலட்சம் மதிப்பில் முட்டம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.50 இலட்சம் மதிப்பில் செண்பகராமன்புதூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.60 இலட்சம் மதிப்பில் பழுகல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.75 இலட்சம் மதிப்பில் குழித்துறை ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.75 இலட்சம் மதிப்பில் பத்மநாபபுரம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் உள்ளிட்ட ஆரம்ப சுகாதார நிலை கட்டிடங்களும், ரூ.30 மதிப்பில் நெல்லிக்காவிளை துணை சுகாதார நிலைய கட்டிடம், ரூ.35 இலட்சம் மதிப்பில் வன்னியூர் துணை சுகாதார நிலைய கட்டிடிடம் என மொத்தம் மொத்தம் ரூ.9.75 கோடி செலவில் 8 மருத்துவ கட்டிட பணிகளும் நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 02.12.2009 அன்று துணை முதலமைச்சராக இருந்தபோது கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியினை 50 மாணவர்கள் சேர்க்கையுடன் தொடங்கி வைத்தார்கள். பின்னர் 2016-17 ஆண்டு முதல் மாணவர்கள் சேர்க்கை - 60 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது மொத்தம் 300 மாணவ மாணவியர்கள், 60 உள்ளுறை பயிற்சி மருத்துவர்கள் பயின்று வருகின்றனர். உள்ளுறை பயிற்சி மருத்துவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000 வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 4 மாணவியர்கள் பயன் பெற்று வருகின்றனர். 7.5% ஒதுக்கீடு திட்டத்தின்கீழ் 9 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதுவரை மொத்தம் 350 ஆயுர்வேத மருத்துவர்கள் இளங்கலை பட்டங்கள் பெற்றுள்ளனர். தற்போது 180 மாணவிகள், 50 மாணவர்கள் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பரப்பளவு 4.75 ஏக்கர் பரப்பளவில், 23.01.2006 அன்று தொடங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக செயல்பட தொடங்கியது. இம்மருத்துவமனையில் 100 படுக்கைகள், நாள் ஒன்றுக்கு 400 புறநோயாளிகள், 140 உள்நோயாளிகளுக்கு சிசிச்சை அளிக்கப்படுகிறது. இம்மருத்துவமனையில் பக்கவாதம், வாதநோய்கள், சிறுநீரகல், தோல் நோய்கள், தீராத நாள்பட்ட புண்கள், மூலம், பௌத்திரம், சைனஸ், கண்பார்வை குறைபாடு, குழந்தையின்மை, மாதவிடாய் கோளாறுகள், மூளைவளர்ச்சி குறை பாடு கொண்ட குழந்தைகள், ஆட்டிசம், எலும்பு முறிவு உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. அனைத்து ஆயுர்வேத பஞ்சகர்மா சிகிச்சைகள், ஆயில் மசாஜ், மூலிகை ஒத்தடம், சிரோ வஸ்தி, சிரோதாரா முதலிய சிகிச்சைகள் மற்றும் பல்வேறு பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்படுகிறது. டாம்கால் நிறுவனம் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ரூ.92 இலட்சம் மதிப்புடைய மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கொரோனா காலத்தில் சிறப்பாக செயல்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.65 இலட்சம் செலவில் 3 துணை சுகாதார நிலையங்கள், ரூ.22 இலட்சம் செலவில் வடசேரி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதார ஆய்வக கட்டிடம், ரூ.2.80 கோடி செலவில் கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கூடுதல் நூலக கட்டிடம், நோய் தடுப்பாற்றல் பகுப்பாய்வு கருவி ஆகிய மருத்துவ சேவைகள் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

202324 ஆம் ஆண்டு மானியக்கோரிக்கை அறிவிப்பின் படி சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை ரூ. 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். சிறுநீரில் வெளியேறும் புரதத்தின் அடிப்படையில் ஆரம்ப நிலையிலேயே சிறுநீரக செயலிழப்பை கண்டறியும் பரிசோதனை அனைத்து துணை சுகாதார நிலையங்களிலும் ரூபாய் 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 10 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் ரூ.2.5 கோடி செலவில் கட்டிட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 5 இடங்களில் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை திறந்து வைத்தார்கள். நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பெருவிளையில் புதிதாக நகர்புற ஆரம்ப சுகாதாரநிலையம் அமைக்கப்பட உள்ளது.

2021-22 மானியக்கோரிக்கையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.04.2022 அன்று சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.364.22 கோடி மதிப்பில் 35 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 18 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 139 அரசு மருத்துவமனைகளுக்கு பன்முக உயர்தர தீவிர சிகிச்சை பிரிவுகள், 2099 படுக்கைகளுடன் தொடங்கி வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 20,03,460 மக்கள் தொகையில் 2,94,317முதல் சேவையும், 9,40,991 தொடர் சேவையும், 99.2% பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ் 3 அரசு மருத்துவமனை, 11 தனியார் மருத்துவமனையில் இதுவரை 2,479பயனாளிகளுக்கு ரூ.8.85 கோடி அரசு தொகை வழங்கப்ப ட்டுள்ளது. கலைஞர் வரும்முன் காப்போம் திட்டத்தின் கீழ் 2021-22-ம் ஆண்டு 31 முகாம்கள் நடத்தப்பட்டு 12,172 பயனாளிகளும், 2022-2023 - ம் ஆண்டு 31 முகாம்கள் நடத்தப்பட்டு 27,864 பயனாளிகளும், 2023-24ம் ஆண்டு 31 முகாம்க ளுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை 20 முகாம்கள் நடத்தப்பட்டு, 21,301 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இதயம் காப்போம் திட்டமானது ரூ.3.37 கோடி மதிப்பில் தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இருதய பாதுகாப்பு மருந்துகளாக 2 ஆஸ்பிரின், 4 க்ளோபிடோக்ரல், 8 அட்ரோவாஸ்டாட்டின் என மொத்தம் - 14 மாத்திரைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு மாதத்தில் 1721 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2023-24ன் படி ரூ.45.12 கோடி மதிப்பீட்டில் 29 அறிவிப்பு களின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு மருத்துவ கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2023-24ன் படி கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.23.75 கோடி மதிப்பில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம், ரூ.2 கோடி மதிப்பில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் உள்கட்டமைப்பு வசதிகள், ரூ.80 இலட்சம் மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய “கட்டணப் படுக்கைகள்” (Pay Wards), ரூ.40 இலட்சம் மதிப்பில் உடற்கூறாய்வு மையங்கள், குலசேகரம் அரசு மருத்துவமனையில் ரூ.5.60 கோடி மதிப்பில் புதிய கட்டிடம், இராஜாக்கமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.40 இலட்சம் மதிப்பில் இந்திய மருத்துவ முறை புற நோயாளி பிரிவுகள் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆணையர் (இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை) மைதிலி கே. ராஜேந்திரன், நிகழ்ச்சியில் விஜய் வசந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், ராஜேஷ் குமார், எம்.ஆர்.காந்தி, நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சி லதா, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பிரின்ஸ் பயஸ், கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ.கிளாரன்ஸ் டேவி, துணை இயக்குநர் மரு.மீனாட்சி, இணை இயக்குநர் பிரகலாதான், மாமன்ற மண்டல தலைவர்கள் திருமதி.அகஸ்டினா கோகிலவாணி, திரு.ஜவஹர், கண்காணிப்பாளர் மரு.அருள்பிரகாஷ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹெலன் டேவிட்சன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள். எப்.எம். ராஜரத்தினம், புஷ்பலீலா ஆல்பன், வழக்கறிஞர் சதாசிவம், மருத்துவர்கள், செவிலியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏண்ணே; “கவர்னர் எல்லாம் ‘ரப்பர் ஸ்டாம்ப்’ அல்ல; ஒரு மசோதாவை வைத்திருக்கிறார் என்றால், அதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கும்” என்று, புதுச்சேரி கவர்னர் தமிழிசை, தமிழ்நாடு ஆளுநர் ரவியின் அடாவடிகளைத் தாமாகவே முன்வந்து நியாயப்படுத்தும் வகையில், ஒரு பேட்டியில் கூறியிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம்; கவர்னர் தமிழிசை அவர்களின் வேண்டுகோளை ஏற்று, கவர்னர்களை இனி ‘ரப்பர் ஸ்டாம்ப்’ என்று அழைக்காமல், ‘ போஸ்டல் ஸ்டாம்ப்’ என்று சொன்னால் பொருத்தமாக இருக்குமா ?**

**ஜனநாயகத்தில், சட்ட மன்றமும் நாடாளுமன்றமுமே அறுதி சக்தி வாய்ந்தவை. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கியவை இந்த இரண்டு அவைகளும்.**

**பெரும்பான்மைப் பிரதிநிதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதாவை, தனி ஒருவரான ஆளுநர் வைத்துக் கொண்டே இருப்பது, பெரும்பான்மையைக் கேலி பேசுவதாகும்; மக்களாட்சியை மாசுபடுத்துவதாகும் !**

**ஆயிரம் காரணங்கள் அல்ல, ஆயிரத்தெட்டு காரணங்களை அலசி ஆராய்ந்த பிறகே ஒரு மசோதா, வாக்கெடுப்பின் மூலம், பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்படுகிறது.**

# இந்தியாவைக் காப்பாற்றவே “இந்தியா” கூட்டணி!

## மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இவ்வளவு பெரிய பொறுப்புகளை, இவ்வளவு பதவிகளில் எல்லாம் இருந்து கடமைகளை ஆற்றிக் கொண்டிருந்தாலும், ஒரே வரியில் அவரைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அவர் ஒரு மக்கள் தொண்டராக இருந்து தன்னுடைய கடமையைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

ஏழு முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள். அதில் நான்கு முறை, அதாவது 1989 - 1996 - 1998 - 2019 - இந்த ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று அவர் எம்.பி. ஆக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். இந்த நான்கு முறை வெற்றி பெற்றார் என்றால், தி.மு.க.வின் கூட்டணியில் இருந்து வெற்றி பெற்றிருக்கிறார் என்பதுதான் எங்களுக்கு இருக்கும் சிறப்பு.

எனவே மக்கள் மன்றத்தில் - நாடாளுமன்றத்தில், மக்களுக்காக-தொழிலாளர்களுக்காக-விவசாயிகளுக்காகத் தொடர்ந்து போராடக் கூடியவர், வாதாடக் கூடியவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள்.

### மணமக்களை வாழ்த்தும் வாய்ப்புப் பெற்றமைக்கு மகிழ்ச்சி!

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், தென்னக ரயில்வே தொடர்பாக டெல்டா மாவட்ட மக்களுக்காக அவர் நடத்திய போராட்டம் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் உழவர்களின் கோரிக்கைக்காக ஒரே நேரத்தில், நாகை மாவட்டத்தில், 50 இடங்களில் மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள்.

எனவே அப்படிப்பட்ட ஒரு செயல் வீரர் - ஒரு ஆற்றலாளர் - ஒரு மக்கள் தொண்டர். இப்படிப்பட்ட பல்வேறு பெருமைகளை பெற்றிருக்கும் நம்முடைய செல்வராஜ் அவர்கள் இல்லத்தில், அவருடைய மகளுக்கு நடைபெறும் இந்தத் திருமணத்தில் நான் கலந்து கொண்டு, அந்த மணவிழாவை நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பை பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் - தி.மு.க.விற்கும் எப்பொழுதும் நட்பு உண்டு, அன்பு உண்டு. கலைஞர்தான் அடிக்கடி சொல்வார், பெருமையோடு சொல்வார். தந்தை பெரியாரை நான் பார்த்திருக்காவிட்டால், அறிஞர் அண்ணாவை நான் சந்தித்திருக்காவிட்டால், நான் கம்யூனிஸ்ட் கட்சியில்தான் இருந்திருப்பேன் என்று பலமுறை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

### தி.மு.க.வுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட்டுக்கும் உள்ள நட்பு கொள்கை சார்ந்தது!

எனவே அந்த உணர்வோடு நம்முடைய நட்பு, தேர்தலுக்காக நட்பு மட்டுமல்ல, கூட்டணியில் இருக்கும் நேரத்தில் ஏற்படும் நட்பு மட்டுமல்ல, கொள்கை நட்பு. அதுதான் முக்கியம். எதிர்கட்சியாக இருந்தபோதும் சரி, இப்போது ஆளுங்கட்சியாக இருக்கிறபோதும் தொடர்கிறது. தொடர்கிறது என்றால், இது என்றைக்கும் தொடரும். உறுதியாக சொல்கிறேன், வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயமாகத் தொடரும் என்பதை இந்த திருமண விழா பகிரங்கமாக அறிவிக்கிறேன்.

ஏனென்றால் நாடாளுமன்றத் தேர்தலை நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். அந்த நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு சந்திக்க இருக்கிறோம் என்று சொன்னால், ஏதோ ஐந்து வருடத்திற்கு ஒருமுறை வரும் தேர்தலாக மட்டும் நாம் நினைத்து விடக்கூடாது. அதையும் தாண்டி சொல்கிறேன், ஆட்சி மாற்றத்திற்காக நடைபெறும் தேர்தலாகக் கூட நீங்கள் நினைத்து விடக்கூடாது. இந்திய ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். இன்றைக்கு சர்வாதிகார ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் - ஒரு பாசிச ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் - பி.ஜே.பி. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏனென்றால் தமிழ்நாட்டைக் காப்பாற்றிவிட்டோம். இந்தியாவைக் காப்பாற்றும் நிலைக்கு நாம் இப்போது வந்திருக்கிறோம். இந்தியாவைக் காப்பாற்றுவதற்காகத்தான் ‘இந்தியா‘ கூட்டணி அமைந்திருக்கிறது.

### மும்பையில் நடைபெறும் ‘இந்தியா’ கூட்டணி கூட்டத்தில் பங்கேற்கிறேன்!

பீகார் மாநிலத்தில், நிதிஷ் குமார் அவர்கள் தலைமையில் கூடி எதிர்க்கட்சியில் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணி உருவாக முதல் கூட்டத்தை பீகார் மாநிலத்தில் நடத்தினோம். அதற்கு அடுத்து கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரில் இரண்டாவது கூட்டத்தை நடத்தினோம். அதில்தான் இந்தியா என்ற பெயரைத் தேர்வு செய்து நம் கூட்டணிக்கு பெயர் அறிவித்தோம். அடுத்த வருகின்ற ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய இரண்டு நாட்கள் மும்பையில் மூன்றாவது கூட்டம் நடைபெற இருக்கிறது. அதில் முக்கிய முடிவுகளை எல்லாம் நாம் அறிவிக்க இருக்கிறோம். நானும் அந்தக் கூட்டத்திற்குச் செல்ல இருக்கிறேன்.

எனவே தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சியை உருவாக்கித் தருவதற்கு நீங்கள் எல்லாம் எவ்வாறு காரணமாக இருந்தீர்களோ அதே போல் ஒன்றியத்தில் நாடாளுமன்றத் தேர்தல் மூலமாக ஒன்றிய அரசு அமைவதற்கு அது நல்லரசாக அமைவதற்கு நீங்கள் எல்லாம் காரணமாக இருக்க வேண்டும்.

### தேர்தல் பிரச்சாரத்தை எப்போதும் திருவாரூரில்தான் தொடங்குவேன்!

தேர்தல் பிரச்சாரத்தை இங்கே தொடங்கி வைக்க வேண்டும் என்று நம்முடைய முத்தரசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொடங்கத்தான் வந்திருக்கிறேன், நான் எப்போதுமே தேர்தல் பிரச்சாரத்தை திருவாரூரில்தான் தொடங்குவேன். இப்போதும் அதே உணர்வோடுதான் இந்த மேடையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

ஒன்பது வருடமாக பி.ஜே.பி.யின் ஆட்சி மோடி அவர்கள் தலைமையில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஒன்பது வருடமாக நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இதை செய்திருக்கிறோம், இந்தத் திட்டங்களை அறிவித்திருக்கிறோம், நிறைவேற்றி இருக்கிறோம், சாதனைகளைப் படைத்திருக்கிறோம், மக்களுக்கு எல்லாம் இப்படி நன்மைகளை செய்திருக்கிறோம் என்று ஏதாவது அவர்களால் சொல்ல முடிகிறதா? எதுவும் சொல்ல முடியவில்லை.

தேர்தலுக்கு முன்னால் என்ன சொன்னார்கள், வெளிநாடுகளில் இருக்கும் கருப்பு பணத்தை எல்லாம் கைப்பற்றி அதை இந்தியாவிற்குக் கொண்டு வந்து நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் 15 லட்சம் ரூபாய் கொடுக்கப் போகிறேன் என்று அறிவித்தார். நான் பல கூட்டங்களில் கேட்டேன். நான் மட்டுமல்ல, எல்லோரும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். 15 லட்சம் வேண்டாம், 15 ஆயிரமாவது தந்தார்களா? 15 ஆயிரம் வேண்டாம், 15 ரூபாயாவது தந்தார்களா? இதுவரையில் இல்லை.

### இளைஞர்களின் வேலை பறிப்புதான் ஒன்றிய அரசின் சாதனை!

நாட்டில் இருக்கும் இளைஞர்களுக்கு எல்லாம் ஒரு ஆண்டிற்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தருவோம் என்று உறுதிமொழி தந்தார்கள். எங்காவது ஒன்றிய அரசின் மூலமாக வேலை வழங்கப்பட்டு இருக்கிறதா? இல்லை. வேலைகள் பறிக்கப்பட்டு இருக்கிறது. இதுதான் இந்த ஆட்சியின் நிலை. இதைப் பற்றி நாம் ஒரு பக்கத்தில் பேசுகிறோம்.

**ஒன்பது வருடமாக பி.ஜே.பி.யின் ஆட்சி மோடி அவர்கள் தலைமையில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஒன்பது வருடமாக நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இதை செய்திருக்கிறோம், இந்தத் திட்டங்களை அறிவித்திருக்கிறோம், நிறைவேற்றி இருக்கிறோம், சாதனைகளைப் படைத்திருக்கிறோம், மக்களுக்கு எல்லாம் இப்படி நன்மைகளை செய்திருக்கிறோம் என்று ஏதாவது அவர்களால் சொல்ல முடிகிறதா? எதுவும் சொல்ல முடியவில்லை.**

## சி.பி.ஐ. - அமலாக்கத்துறை மூலம் ஒன்றிய அரசின் மிரட்டல்களுக்கெல்லாம் ஒருபோதும் அஞ்சாது தி.மு.க.!

இதைவிட கொடுமை. மதத்தை வைத்து ஆங்காங்கே மதக் கலவரங்களை ஏற்படுத்தி, நாட்டை இரண்டாக்கும் சூழ்நிலையில் ஒரு கொடிய ஆட்சி இன்றைக்கு இந்தியாவில் நடந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி எல்லாம் கலந்து பேசி இதற்கான முடிவெடுக்க வேண்டும், இந்த ஆட்சியை ஒழித்தாக வேண்டும், தேர்தலில் நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியா என்ற தலைமையில் ஒரு கூட்டணியை நாம் அமைத்திருக்கிறோம்.

இதைப் பிரதமர் மோடியால் தாங்க முடியவில்லை. அதிலும் தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் எப்படி நாடாளுமன்றத் தேர்தலில், சட்டமன்றத் தேர்தலில், உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களில் - ஒரு கூட்டணி அமைத்து ஸ்ட்ராங்காக அந்தக் கூட்டணியை வழிநடத்திக் கொண்டிருக்கிறோமோ, அந்தக் கூட்டணி தொடர்ந்து தமிழ்நாட்டில் வெற்றி பெற்று கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

### ‘இந்தியா’ கூட்டணியைக் கண்டு அச்சம் வந்திருக்கிறது மோடிக்கு!

எனவே அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் இந்தக் கூட்டணியும் அந்த இந்தியா கூட்டணியில் சேர்ந்திருக்கிறது. இந்தியா என்ற கூட்டணி உருவாகுவதற்கு தமிழ்நாட்டில் இருக்கும் இந்தக் கூட்டணி காரணமாக இருக்கிறது என்ற ஒரு ஆத்திரம் இன்றைக்கு பிரதமராக இருக்கும் மோடிக்கு வந்துவிட்டது. அதனால்தான் எங்கு சென்றாலும், அது சுதந்திர தின நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கொடியேற்று விழா நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது பல மாநிலங்களுக்குச் சென்று அங்கு நடத்தும் அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது வெளிநாடுகளுக்கு செல்லும் நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி - எங்கு சென்றாலும் இன்றைக்கு நாம் அமைத்திருக்கும் கூட்டணியைப் பற்றி விமர்சனம் செய்து பேசிக் கொண்டிருக்கிறார், கொச்சைப்படுத்தி பேசுகிறார்.

அதிலும் தமிழ்நாட்டில் இருக்கும் நம்முடைய அணியைப் பற்றி, குறிப்பாக தி.மு.க.வை பற்றி இன்றைக்கு அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை. அந்த அளவிற்குக் கொச்சைப்படுத்திப் பேசுகிறார்.

என்ன பேசுகிறார்? தமிழ்நாட்டில் ஊழல் வந்துவிட்டதாம். ஒன்பது வருடமாக சொல்லிக் கொண்டிருக்கிறார். “எனவே அந்த ஊழலை ஒழித்தே தீருவேன். இந்தியாவில் இருக்கும் ஊழலைத் ஒழித்தே தீருவேன்” என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்.

### ஊழலைப் பற்றி பேசுவதற்கு மோடிக்கு யோக்கியதை உண்டா?

நான் பிரதமர் மோடி அவர்களை பார்த்து அடக்கத்தோடு கேட்க விரும்புவது, ஊழலைப் பற்றி பேசுவதற்கு யோக்கியதை பிரதமராக இருக்கும் மோடிக்கு உண்டா? உங்களுடைய வண்டவாளம் எல்லாம் இப்போது சி.ஏ.ஜி. ஆதாரங்களோடு எடுத்து வெளியிடுகிறார்களே, எல்லாவற்றையும் குறித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். ஏனென்றால் புள்ளி விவரம் இது. தவறாகப் பேசி விடக் கூடாது. எதையும் ஆதாரத்தோடுதான் பேச வேண்டும். அதற்காக நான் புள்ளி விவரத்தை எல்லாம் குறித்து கையில் எடுத்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.

ஊழலைப் பற்றி பேசுவதற்கு பி.ஜே.பி.க்கு என்ன தகுதி இருக்கிறது? நான் கேட்கிறேன். சி.ஏ.ஜி. அறிக்கை இன்றைக்கு என்ன சொல்கிறது. சி.ஏ.ஜி. அறிக்கை என்பது ஒரு ஆய்வு அறிக்கை. மத்திய அரசிற்குக் கட்டுப்பட்டு இருக்கும் அந்த அமைப்பு. அது ஒவ்வொரு வருடமும் அன்றைக்கு அரசின் நிலையைப் பற்றி, அந்த அரசு செய்திருக்கும் செலவுகளை பற்றி ஆய்வு செய்து அதற்கு ஒப்பீடு கொடுப்பார்கள். அதுதான் சி.ஏ.ஜி.யின் வேலை.

### ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை ஊழல் ஆட்சி என்கிறது சி.ஏ.ஜி.!

அந்த சி.ஏ.ஜி. என்ன சொல்கிறது என்றால், ஒன்றியத்தில் நடைபெறும் பா.ஜ.க. ஆட்சி - ஊழல் ஆட்சி. முறைகேடுகள் அதிகம் கொண்ட ஆட்சி. லஞ்ச லாவண்யம் பெருத்துப் போன ஆட்சி என்று சொல்கிறது. நாங்கள் சொல்லவில்லை. எதிர்க்கட்சி சொல்லவில்லை. நாங்கள் சொல்வதாக நீங்கள் நினைக்க வேண்டாம். நாங்கள் ஏற்கனவே சொல்லிக் கொண்டிருக்கிறோம் அது வேறு. இப்போது யார் சொல்கிறார்? சி.ஏ.ஜி. சொல்கிறது. மத்திய கணக்குத் துறையின் அறிக்கை சொல்கிறது.

ஏழு விதமான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. ஒன்று, இரண்டு அல்ல - ஏழு விதமான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

- ★ **பாரத்மாலா திட்டம்**
- ★ **துவாரகா விரைவுப் பாதைக் கட்டுமானத் திட்டம்**
- ★ **சுங்கச் சாவடி கட்டணங்கள்**
- ★ **ஆயுஷ்மான் பாரத் திட்டம்**
- ★ **அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்**
- ★ **கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம்**
- ★ **எச்.ஏ.எல். விமான வடிவமைப்புத் திட்டம்**

### ஏழு திட்டங்களில் நடைபெற்ற மோசடிகள்!

இந்த ஏழு திட்டங்களிலும் பல கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறது. நிதியைக் கையாளுவதில் மோசடிகள் அரங்கேறி இருக்கிறது என்று இந்த அறிக்கை பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தி இருக்கிறது.

★அதாவது, ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் - 99999 99999 என்ற ஒரே போலி செல்போன் நம்பரில் 7.5 லட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டு ஊழல் நடந்திருக்கிறது. எவ்வாறு பச்சையாக ஒரு மோசடியை செய்திருக்கிறார்கள் பாருங்கள்!

★ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்ற நோயாளிகளில், 88 ஆயிரத்து 760 பேர் இறந்துவிட்டார்கள். ஆனால், அவர்கள் இறந்த பிறகும், சிகிச்சை அளிக்கப்படுவதாக சொல்லி, 2 லட்சத்து 14 ஆயிரத்து 923 காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

தகுதியில்லாத குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் பயனாளிகளாக பதிவு செய்யப்பட்டு, சுமார் 22 கோடியே 44 லட்சம் ரூபாய் வரை மோசடி நடந்திருக்கிறது. இதை நாங்கள் சொல்லவில்லை. எங்கள் இந்தியா கூட்டணி சொல்லவில்லை. இதைக் கண்டுபிடித்து, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆய்வறிக்கை வெளியிடும் சி.ஏ.ஜி. அறிக்கை சொல்கிறது.

★துவாரகா விரைவு நெடுஞ்சாலைத் திட்டத்தில், ஒரு கிலோ மீட்டருக்கு 18 கோடி ரூபாயாக இருந்த செலவு 250 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நன்றாக கவனியுங்கள்! திட்ட மதிப்பை விட, 278 மடங்கு கூடுதல் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

### சுங்கச் சாவடிகளில் பல ஆயிரம் கோடி மோசடிகள்!

★அயோத்தியில் ராமாயணம் தொடர்புடைய இடங்களை நவீனப்படுத்துகிறோம் என்று சொல்லி ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இதில் விதிமுறைகளை மீறி ஒப்பந்த தாரர்களுக்கு தேவையற்ற சலுகைகள் தரப்பட்டிருக்கிறது. இதனால் அரசுக்கு 8 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

★ பாரத்மாலா திட்ட டெண்டர் முறைகேடுகளை சி.ஏ.ஜி. அம்பலப்படுத்தி இருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் தொலைவு நெடுஞ்சாலை அமைக்க நிர்ணயித்ததைவிட, இரண்டு மடங்கு அதிகமாக நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

## தங்களுடைய லஞ்ச லாவண்யங்களை மூடி மறைக்க மதவாதத்தை கையில் எடுக்கிறது பா.ஜ.க.!

★ நாடு முழுவதும் சுமார் 600 சுங்கச்சாவடிகள் இருக்கிறது. இதில் 5 சுங்கச்சாவடிகளை மட்டும் சி.ஏ.ஜி. ஆய்வு செய்திருக்கிறது. அதில் விதி களுக்குப் புறம்பாக, 132 கோடியே 5 லட்சம் ரூபாயை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாகன ஓட்டிகளிடம் இருந்து வசூலித்திருக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கும் பரனூர் சுங்கச்சாவடியும் இதில் ஒன்று. இந்த ஒரே ஒரு சுங்கச்சாவடியில் மட்டும் ஆறரை கோடி ரூபாய் முறைகேடாக வசூலித்திருக்கிறார்கள். எனவே நாடுமுழுவதும் ஆய்வு நடத்தினால், பல ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு வெளிச்சத்திற்கு வரும் என்று அந்த ஆய்வறிக்கை சொல்கிறது.

★இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் விமான எந்திரம் வடிவமைப்பில் 159 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

★ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டப் பணத்தை எடுத்து ஒன்றிய அரசு விளம்பரத்துக்காகப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

### ஒன்றிய உள்துறை அமைச்சக அதிகாரிகள் மீது அதிக ஊழல் புகார்!

இவ்வாறு என்னென்ன முறைகேடுகள்? எவ்வளவு கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது என்று மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்த ஆய்வறிக்கை -அந்த நிறுவனம் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறது.

அதே சி.ஏ.ஜி. அறிக்கையின்படி ஒன்றிய அரசுத் துறைகளில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருக்கிறது.

ஊழலைப் பற்றி ஒன்றிய அமைச்சர் அமித் ஷா அவர்கள் அதிகம் கவலைப்படுகிறார்.

இன்னொரு அமைப்பு சென்ட்ரல் விஜிலென்ஸ் கமிஷன், அதாவது சி.வி.சி. என்ன சொல்கிறது என்றால், மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் சில நாட்களுக்கு முன்பு அறிக்கை வெளியிட்டு இருக்கிறது.

ஒன்றிய அமைச்சகங்களிலேயே உள்துறை அமைச்சக அதிகாரிகள் - அலுவலர்கள் மேல்தான் கடந்த வருடம் அதிகமான ஊழல் புகார்கள் பதிவாகி இருக்கிறது. இதையும் நான் சொல்லவில்லை. சி.வி.சி. அறிக்கைதான் சொல்கிறது.

அதில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், ஒன்றிய அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு எதிராக, கடந்த ஆண்டு மட்டுமே, 1 லட்சத்து 15 ஆயிரத்து 203 புகார்கள் பதிவாகி இருக்கிறது. இதில் உள்துறை அதிகாரிகள் மீது மட்டும் 46 ஆயிரத்து 643 புகார்கள் பதிவாகி இருக்கிறது.

### பி.ஜே.பி.யின் ஊழல்களை பேசுவதால் மிரட்டிப் பார்க்கிறார்கள்!

இவர்கள்தான் ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்று இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்கள் செய்த தவறை எல்லாம் மூடி மறைத்து, நம்மீது வீண்பழியை சுமத்தி, இவற்றைப் பற்றி எல்லாம் தி.மு.க. பேசுகிறதே, தி.மு.க. கூட்டணி கட்சிகள் பேசுகிறதே என்று ஆத்திரம் ஏற்பட்டு, கோபம் ஏற்பட்டு, எரிச்சலில் நம்மை பழி வாங்குவதற்காக இன்றைக்கு சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமான வரித்துறை என்று நம்மை எல்லாம் மிரட்டி பார்க்கிறார்கள்.

இதையெல்லாம் கண்டு அஞ்சி நடுங்கிவிடுகிற கட்சி தி.மு.க. அல்ல. தி.மு.க என்பது பனங்காட்டு நரி. இந்த சலசலப்புக்கு எல்லாம் நாம் அஞ்சி விடமாட்டோம். எமர்ஜென்சியையே பார்த்தோம். எமர்ஜென்சியையே எதிர்த்தோம். எனவே எதைப் பற்றியும் தி.மு.க. கவலைப்படத் தயாராக இல்லை. அதேபோல் இந்தியா என்று அமைப்பில் இருக்கும் கூட்டணியும் இதைப் பற்றி கவலைப்படவும், சிந்திக்கவும் தயாராக இல்லை.

### மதவாதத்தை வைத்து இனியும் மக்களை ஏமாற்ற முடியாது!

எனவே தங்களுடைய லஞ்ச லாவண்யங்களை மூடி மறைப்பதற்காக, இன்றைக்கு மதவாதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற நினைக்கிறார்கள். இனி வரும் காலகட்டங்களில் தமிழ்நாட்டு மக்களை மட்டுமல்ல, இந்தியாவையும் நீங்கள் ஏமாற்ற முடியாது. அதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகத்தான் இந்தியா கூட்டணி அமைந்திருக்கிறது. அந்த இந்தியா கூட்டணியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இடம்பெற்றிருக்கிறது என்று உங்களுக்கு நன்றாக தெரியும். அந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போர் வீரர்களில் ஒருவராக விளங்கிக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்கள்.

அந்த செல்வராஜ் அவர்கள் இல்லத்தில் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். எனவே மணவிழா காணும் மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்ந்திட வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய் இருந்து, உங்கள் வாழ்க்கையை நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

### திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்படும் திட்டங்கள்!

இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்து திராவிட மாடல் ஆட்சி என்ற பெயரில் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திட்டங்கள், சாதனைகள் அத்தனையும் உங்களுக்கு நன்றாக தெரியும். தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்களை எல்லாம் எந்த அளவிற்குப் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு புரியும்.

நேற்று முன்தினம், 25-ஆம் தேதி, திருக்குவளையில் கலைஞர் படித்த பள்ளியில் தொடங்கிய திட்டம்தான் காலை உணவுத் திட்டம். இது தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டம் அல்ல. எனவே சொன்னதை மட்டும் அல்ல, சொல்லாததையும் செய்யும் ஆட்சிதான் இன்றைக்கு இருக்கும் திராவிட மாடல் ஆட்சி. அதேபோல் வருகிற செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று கலைஞர் பெயரால் அமைந்திருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்கப்படவிருக்கிறது. ஒரு கோடிக்கும் குறையாமல், அதைவிட அதிகமாகத்தான் வரும் என்று இன்றைக்கு கணக்கு விவரங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு வந்தாலும் கவலை இல்லை. யார் யாருக்குச் சேர வேண்டுமோ அவர்களுக்கு நிச்சயமாக அந்த தொகை சென்று சேரப்போகிறது.

### ஒன்றியத்திலும் நல்லாட்சி மலர நீங்கள் துணை நிற்க வேண்டும்!

இப்படிப்பட்ட இந்த ஆட்சிக்குத்தான் இன்றைக்கு நீங்கள் துணை நின்று கொண்டிருக்கிறீர்கள். எப்படி தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சி உருவாகுவதற்கு, திராவிட மாடல் ஆட்சி உருவாக்குவதற்கு காரணமாக இருந்தீர்களோ, அதேபோல் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றியத்தில் ஒரு சிறப்பான ஆட்சி உருவாக நீங்கள் எல்லாம் காரணமாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு, வாழ்க மணமக்கள்... வாழ்க மணமக்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## உன்னதத் திட்டம் மலர்ந்தது
## உலகமே நெகிழ்ந்து... மகிழ்ந்தது..!



தமிழ்நாடு வரலாற்றில் ஒரு பொன்னாள் இந்த
தரணிக்கே வேறேது நன்னாள்...?
அமுதாய் பிள்ளைகட்கு காலை உணவு
அள்ளியே வழங்கிய திருநாள்...

பதினேழு இலட்சம் பிள்ளைகள்
பசியாற்றல் இமாலய சாதனை..
இதுவரை ஏழையர் பட்டதுயர்
இல்லாது ஒழிந்தது வேதனை...

இதுபோல் ஏற்றமிகு திட்டம்
இந்தியாவில் இதுவரை வந்ததில்லை – இந்தப்
புதுமையை எண்ணுகின்ற போது
பூக்கின்ற புத்துணர்வு கொஞ்சமில்லை...

வயிற்றுப்பசி எரிகின்ற நெருப்பென்று
வள்ளலார் உரைத்ததை நினைந்து...
வையகமே பாராட்டும் வகையில்
வந்தது முதல்வர்மனம் கனிந்து...

காமராசர் விண்ணிருந்து வாழ்த்துகிற...
கலைஞரும் எம்.ஜி.ஆரும் போற்றுகிற
தேமதுரக் காட்சியைக் காணுகிறேன்...
திசையெட்டும் மலர்களைத் தூவுகிறேன்..

உலகமே அண்ணாந்து பார்க்கின்ற
உன்னதத் திட்டத்தைப் போற்றிடுவோம் – நாமும்
வலம் வந்து உழைக்கின்ற தளபதிக்கு
வாழ்த்துக் கொடியினை ஏற்றிடுவோம்!



–கவிஞர் இரவிபாரதி...

## சென்னை நீச்சல் குளத்தில் மூழ்கி
# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 28–

சென்னை நீச்சல் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறியதுடன் நிதி உதவியும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:–

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நீச்சல் குளத்தில் நேற்று முன்தினம் (26.8.2023) மதியம் குடும்பத்தி னருடன் நீந்துவதற்கு வந்த பள்ளிக்கரணை பகுதியைச் சேர்ந்த அனிருத் என்ற ஐந்துவயது சிறுவன் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

சிறுவனின் இறப்பு குறித்து துறை ரீதியான விசாரணை நடத்திஉரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளேன்.

சிறுவன் அனிருத்தை இழந்துவாடும் அவரது பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம்ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி!
# வரலாற்றுச் சாதனை புரிந்த இந்திய அணியைப் போற்றுகிறேன்!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 28 -

உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வரலாற்றுச் சாதனை புரிந்துள்ள இந்திய ஆடவர் தொடர் ஓட்ட அணியைப் பாராட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

உலக தடகள சாம்பியன்ஷிப்பில் வர**லாற்றுச் சாதனை புரிந்துள்ள இந்திய ஆடவர் 4 x 400 தொடர் ஓட்ட அணியினரைப் போற்றுகிறேன்.**

**ஆசிய அளவிலான புதிய சாதனையைப் படைத்து, ஓட்டப்பந்தயத்தில பல முன்னணி நாடுகளை வீழ்த்தி, இறுதிப் போட்டிக்குள் நமது அணியினர் நுழைந்துள்ளனர்.**

**இதற்காக, முகம்மது அனஸ் யாஹியா, அமோஜ் ஜேக்கப், முகம்மது அஜ்மல் மற்றும் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரரான**




**ராஜேஷ் ரமேஷ் ஆகிய நால்வருக்கும் அவர்களது அபாரமான ஓட்டத்துக்காகப் பாராட்டுகள்.**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## நெல்லை மத்திய மாவட்டக் கழகக் கூட்டம்!
### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை.ஆக.28-

நெல்லை மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் 26 ந்தேதி மாலை 6 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமையில்,மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்களுடன் வாக்குசாவடி சீரமைத்தல் குறித்து கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கிரிஜா குமார், எஸ்.வி.சுரேஷ்,கே. டி.சி.தர்மன், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், ஒன்றியச் செயலாளர்கள் கல்லூர் மாரியப்பன், அன்பழகன், அருள்மணி, பகுதி செயலாளர்கள் தச்சை சுப்பிரமணியன், நெல்லை நமச்சிவாயம் என்ற கோபி, பாளை அன்டன் செல்லதுரை, மேலப்பாளையம் துபாய் சாகுல், மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம், மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, வழக்கறிஞர் அணி காமினி தேவன், ராஜாமுகமது, கந்தசாமி, மணிகண்டன், வின்சர், அருள்ராஜ், கலை இலக்கியப் பகுத்தறிவு அமைப் பாளர் ராஜகுமாரி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா, ஆதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர் நவநீதன், மாவட்ட பிரதிநிதிகள் சுரேஷ், கார்டன் சேகர, வட்டச் செயலாளர்கள் கல்யாணசுந்தரம், சடாமுனி, பத்மராஜ், பெர்க்மான்ஸ் பாஸ்கர், காஜா முகைதீன், சாகுல் ஹமீது, ஆறுமுகம், குமரேசன் பேபி கோபால்,செய்யது முகைதீன், தென்கரை முத்து, மாரி முத்து, செல்வக்குமார், இசக்கி,பால்துரை, அந்தோணி, வேல்முருகன், ஜெயின் உசேன்,மேகை செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ‘இந்திய இலக்கியச் சிற்பிகள்’ வரிசையில் ‘கலைஞர் மு.கருணாநிதி’ நூல்!
# கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்!
## முனைவர் ம.இராசேந்திரனுக்கு கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்து!

சென்னை, ஆக. 28-

‘இந்திய இலக்கியச் சிற்பிகள்’ வரிசையில் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரனின் கைவண்ணத்தில் ‘கலைஞர் மு.கருணாநிதி’ நூலை சாகித்ய அகாடமி வெளியிட்டுள்ளது.

இந்நிகழ்வையொட்டி, இந் நூலினை எழுதிய முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரனுக்கு கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய வாழ்த்துக் கடிதத்தில், “படைப்பின் வழி, கலைஞரின் பன்முக அடையாளத்தை பறை சாற்றி, கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதியுள்ள வாழ்த்துக் கடிதம் வருமாறு:-

**அன்புத் துணைவேந்தர் அவர்களுக்கு,**

**‘இந்திய இலக்கியச் சிற்பிகள்’ வரிசையில் உங்கள் கைவண்ணத்தில் சாகித்ய அகாடமி வெளியிட்ட ‘கலைஞர் மு.கருணாநிதி’ நூல் படித்தேன்.**

**கலைஞரின் தவிர்க்க முடியாத பரிமாணங்களையெல்லாம் பதிவுசெய்திருக்கிறீர்கள்.**

**128 பக்கங்களில் சங்குக்குள் சமுத்திரத்தை அடக்கும் முயற்சி இது.**



**கலைஞரின் பரந்த படைப்பாளுமையை இதைவிடவும் இரத்தினச் சுருக்கமாக வடித்துவிட முடியாது.**

**கலைஞர்பால் பேரன்பும் அவர் படைப்புக்களை உள்வாங்கும் உளமும் நுண்மாண் நுழைபுலமும் மிக்கவர்க்கே அது சாத்தியம்.**

**உங்கள் அறிவின் உரத்துக்கும் ஆராய்ச்சித் திறத்துக்கும் இந்நூல் ஓர் இனிய சான்று.**

**இப்படைப்பின்வழி, கலைஞரின் பன்முக அடையாளத்தைப் பறைசாற்றிய தங்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.**

**கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து, தனது வாழ்த்துக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகத்தான திட்டம்!
# திருவொற்றியூர் அரசுப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம்!
## கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

சென்னை, ஆக. 28 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய நோக்கத்தில் இந்திய வரலாற்றில் இந்திய மாநிலங்களிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி உணவு வழங்கும் திட்டம் 1545 பள்ளிகளில் துவங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மாணவர்களுக்கு பெரிதும் பயனளிக்கும் இத்திட்டம் அனைத்து தொடக்கப் பள்ளி மாணவர்களும் பயன்பெரும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ள 31,008 பள்ளிகளிலும் கடந்த 25.08.2023 அன்று முதல்வர் அவர்களால் துவங்கப்பட்டது,

திருவொற்றியூரில் 4வது வட்டத்தில் இராமநாதபுரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாமன்ற உறுப்பினர் ஆர். ஜெயராமன் அவர்கள் முன்னிலையிலும் 6 வது வட்டம் தியாகி சத்தியமூர்த்தி நகர் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் மாமன்ற உறுப்பினர் எம்.எஸ். திரவியம் முன்னிலையில் மாநில மீனவர் அணி துணைத் தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்து மாணவ செல்வங்களுக்கு உணவு பரிமாறியும் மாணவச் செல்வங்களுடன் அமர்ந்து உணவு உட்கொண்டு மகிழ்ந்தார். மேலும் பள்ளிக்கு வருகை தந்த அனைத்து மாணவ மாணவியருக்கும் பிஸ்கட் பாக்கெட் மற்றும் தண்ணீர் பாட்டில் வழங்கி வரவேற்றார்.

இந்த சிறப்புக்குரிய நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா. முருகேசன், வட்டக் கழக செயலாளர்கள் இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ், எஸ். மகேந்திரன், ஆர்.தினேஷ்குமார், ஜி.தினேஷ்கு மார், மோகனசுந்தரம், முன்னாள் துணைச் செயலாளர் இ.ரமேஷ், கே. தேசிங்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் தலைமை கழக சொற்பொழிவாளர் வாசு.கருணாநிதி மாவட்ட துணை அமைப்பாளர்கள் பா.பாலஉமாபதி, பிரட் சுரேஷ், ஜெகன் பகுதி பிரதிநிதிகள் ரமேஷ், இம்மானுவேல், சங்கர், ஜே. ஆர்.டி.சேகர் எம்.பிரேம், கொள்கை மணி சத்தியமூர்த்தி நகர் கார்த்தி, பிரதீப், ராமநாதபுரம் நிர்வாகிகள் பஞ்சாட்சரம், ஜெயவேல், நந்தகுமார், இராமநாதபுரம் ரவி, நாகராஜ், சி.தினேஷ் எஸ்.விஜயராகவன் கஜா, லோகநாதன் விமல், ரமேஷ், எம்.எஸ்.ரவி, மணலி எழில், ராமநாதபுரம் கிராம நிர்வாகிகள், தலைமை ஆசிரியர்கள் முத்துசெல்வி, வசந்தி, மண்டல உதவி ஆணையர் நரேந்திரன், செயற்பொறியாளர் தணிகைவேல், உதவி செயற்பொறியாளர் பாபு மற்றும் கழக தோழர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!
### மாவட்ட கழகச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (28-08-2023) நாளை திங்கள்கிழமை காலை 10.மணியளவில் திருவள்ளூர் கங்கா ஹோட்டல் மேல்மாடி அருகில் உள்ள டி.கே.எம். மஹாலில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினரும், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. அதுசமயம் தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி. ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பூபதி, கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில தொழிலாளர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத் ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர். முன்னதாக திருவள்ளூர் நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் ஆகியோர் வரவேற்பு அளிக்கிறார்கள்.

மேற்படி கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர -பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1.திருவள்ளூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ள வருகைத்தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு வழங்குதல் குறித்து.

2.திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துக் கொள்ளும் திருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் இருந்து பங்கேற்கும் கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் குறித்து. 3.கழக ஆக்கப் பணிகள்.

திருத்தணி **எஸ்.சந்திரன்**,எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



மதுரை ரயில் தீவிபத்தில் பலியானவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ரூ3லட்சத்திற்கான காசோலையினை பாதிக்கப்பட்டவர்களிடம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் ஆறுதல் கூறி வழங்கிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாநகராட்சி ஆணையாளர் பிரவின்குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

### தென்காசி மாவட்டத்தில்
## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிக்கான இடம்!
### அமைச்சர் - கழகத்தினர் ஆய்வு!

தென்காசி, ஆக.28-

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 05.09. 2023 செவ்வாய்க்கிழமை அன்று தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் பள்ளி வளாகத்தில் மதியம் 3 மணி அளவில் நடைபெறும், கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியிலும்,மாலை 5 மணி அளவில் இளைஞர் அணி நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரையில் இருந்து வருகிற செப்டம்பர் 4ம் தேதி மாலையில் புறப்பட்டு தென்காசி வருகை தருகிறார்கள்.

இதற்கான நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்தை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் பொதுக் குழு உறுப்பினர் ரஹீம்,நகர செயலாளர்கள் சாதிர் (தென்காசி) வெங்கடேசன் (செங்கோட்டை) ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், பெரியதுரை,மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி கிருஷ்ணராஜா, முகேஷ், வழக்கறிஞர் அணி வேலுச்சாமி, இலக்கிய அணி வளனரசு,அணி துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜ் சுப்பிரமணியன், முகமது அப்துல்ரஹீம்,

ஒன்றிய பொருளாளர் இசக்கி பாண்டியன் ஒன்றிய துணைச் செயலாளர் ஆனந்த் குற்றாலம் பேரூர் செயலாளர் குட்டி என்ற சங்கர் மாணவர் அணி ரமேஷ் சாம்பார் வடகரை மாறன் முன்னாள் மாவட்ட இளைஞர் அணி உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகளை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் செய்து வருகின்றனர்.

## 30ஆம் ஆண்டு நினைவு நாள்



காஞ்சிபுரம் **கே.டி.எஸ்.மணி**

மறைவு – 28.8.1993

★★★

இறுதி மூச்சு உள்ள வரை
**பெரியார், அண்ணா, கலைஞர்**
வழி நின்ற சுயமரியாதைச் சிங்கம்!
தம் உடலைத் தானம் செய்து
புகழுலகின் உச்சிக்கே சென்றுவிட்ட உத்தமர்!

**அ.இராமமூர்த்தி – இரா.அருளரசன்**
உறவினர்கள், நண்பர்கள். (வி.ம்)





சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுக்கு இளைஞர்களை தயார்படுத்தும் வகையில் புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நேற்று புதுக்கோட்டையில் நடைபெற்றது. கழக இளைஞர் அணி செயலாளர்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில் அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, சிவ.வீ. மெய்யநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்துராஜா, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் சு. சண்முகம், மணிராஜன் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



திருச்சியில் நடைபெற்ற – கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்ற கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டு திருச்சி – அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வெங்கடேஷ் குமாரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி உடனிருந்தார்.

### க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! ஜெ.ஞானசேகரன் முன்னிலை! நாத்திகம் நாகராஜன் வரவேற்புரை!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் - மாணவர்களுக்கான போட்டிகள்!

### அ.சுகுமார் தொடக்கவுரை! க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

காஞ்சிபுரம், ஆக.28-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கான திறனறிதல் பேச்சுப் போட்டி இன்று (28.8.2023) காலை 10 மணிக்கு உத்திரமேரூர், திருப்புவனத்தில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகித்து போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள்- சான்றிதழ் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார். ஒன்றியச்செயலாளர் கெ.ஞானசேகரன் முன்னிலை வகிக்கிறார்.

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

அரசு கலைக்கல்லூரி முதல்வர் அ.சுகுமார் தொடக்க உரை நிகழ்த்துகிறார்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இதில் இரா.நாகன், எம்.எஸ்.சுகுமார், சி.கே.வி. தமிழ்ச்செல்வன், எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி, பி.சசிகுமார், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், வி.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.எம்.குமார், க.குமணன், டி.குமார், அ.யுவராஜ், எஸ்.சந்துரு, கே.திலகர் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தருவோரை எம்.ஆர்.தனசேகரன், ஏ.சங்கர், வல்லரசு செங்குட்டுவன், ஜெ.முல்லைவாணன், கே.ஆர்.டில்லிகுமார், சு.முரளிதரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கலைச்செல்வி ஜெகநாதன் நன்றி கூறுகிறார்.

### திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை – மேம்படுத்தப்பட்ட

# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு!

### பணி நேரத்திற்கு வராத மருத்துவர் - மருத்துவமனைப் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு!

நெல்லை, ஆக.28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.08.2023) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திசையன்விளை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது சரியான நேரத்தில் பணியில் இல்லாத மருத்துவர், மருந்தாளுநர் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் அனைவர் மீதும் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள துணை இயக்குனர், சுகாதார பணிகள் அவர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மருத்துவமனை ஆய்வின்போது அங்கு நிறுத்தப்பட்டுள்ள நடமாடும் மருத்துவமனை வாகனத்தில் மருந்து பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டு சரிவர பாதுகாப்பின்றி இருந்ததை பார்த்தஅமைச்சர் அவர்கள், அங்குள்ள செவிலியரிடம் விசாரித்த போது அந்த வாகனத்தின் ஓட்டுனர் பணிக்கு வராததையும், அந்த வாகனத்தில் இருந்த மருந்துகள் பாதுகாப்பின்றி இருப்பதை கண்ட அமைச்சர் அவர்கள், அலட்சியத் தன்மையுடன் பணியாற்றியதை அறிந்து, அந்த ஓட்டுநர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அவர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நாய்க்கடி மற்றும் பாம்புகடி மருந்துகள் கையிருப்பு உள்ளதை பொதுமக்கள் தேவைக்கேற்ப அறிந்து பயன்படுத்தும் வகையில், அதற்குரிய மருந்து இருப்பு அறிவிப்பு பலகைகள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வைக்குமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துறை இயக்குனரை அறிவுறுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தினை அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டம், அமைந்தகரையில் உள்ள மஞ்சக்கொல்லை, சென்னை மாநகராட்சி துவக்கப் பள்ளியில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் துவக்கி வைத்தார். இதில் அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.







கலைஞர் 100
1924 - 2023
பெரம்பலூர்-அரியலூர் மாவட்ட
இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகைதரும்
மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உயர்திரு. கழக இளைஞரணி செயலாளர் அவர்களே
வருக! வருக!!
இவண்,
ஆ.இராசா MP
கழக துணை பொதுச்செயலாளர்
சா.சி.சிவசங்கர்
அரியலூர் மாவட்ட கழக செயலாளர்
தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர்
குன்னம் சி.இராஜேந்திரன்
பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்
மாவட்ட ஊராட்சி தலைவர்
இவண்,
பெரம்பலூர் - அரியலூர் மாவட்ட தி.மு.க.



கலைஞர்
100
1924 - 2023
பெரம்பலூர்-அரியலூர் மாவட்டத்திற்கு
பல்வேறு துறைகள் தொடர்பாக ஆய்வு கூட்டத்திற்கு வருகைதரும்...
மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞரணி செயலாளர்
உயர்திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களே
வருக! வருக!!
இவண்,
ஆ.இராசா MP
கழக துணை பொதுச்செயலாளர்
சா.சி.சிவசங்கர்
அரியலூர் மாவட்ட கழக செயலாளர்
தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர்
குன்னம் சி.இராஜேந்திரன்
பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்
மாவட்ட ஊராட்சி தலைவர்
பெரம்பலூர் - அரியலூர் மாவட்ட தி.மு.க.


ARASU ARTS
28 ஆகஸ்ட் 2023
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்
அன்பில் பொய்யாமொழி
அவர்களின் 24ஆம் ஆண்டு நினைவு நாள்
நீங்கா நினைவுகளுடன்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA
தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் / செயலாளர் – திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

# மாணாக்கர் வயிற்றுக்குச் சோறீந்து கல்வி பயிற்றுவிக்கும் தளபதி பைந்தமிழ்போல் வாழ வாழ்த்துவன்!



உற்றவுடல் வயிற்றுக்கும் உணவளித்தே
இளமைதனில் காக்க லுற்றால் /
உடல்நோயும் அண்டாதே ஒப்பில்லா
வலிமையுடல் உறுமென் றோர்ந்து //

கற்கின்ற மாணாக்கர் கடும்பசிக்குக்
காலையுணவு(வு) அளித்து நாளும் /
கல்வியினைப் பயிற்றுவிக்கும் கலை
ஞரின்சேய் தளபதியை வாழ்த்துகின்றேன் //

பெற்றெடுத்தோர் பிள்ளைகளைப் பேணு
தல்போல் கற்குபிள்ளை அனைவருக்கும் /
பசியதனை ஓடவைத்துப் படிப்பதிலே
நாட்டமுடன் கற்க வைத்து //

நற்றமிழ மாணாக்கர் ஞாலத்தில்
ஒளிர்கதிராய் ஒளிர வைக்க /
நல்லுணவைக் காலையிலே அளிக்
கின்ற தளபதிபைந் தமிழ்போல் வாழி ! //

**புலவர் பழ.தமிழாளன்,**
இயக்குநர் பைந்தமிழியக்கம்,
திருச்சிராப்பள்ளி.

## 'வாட்ஸ்அப்' பில் வந்த செய்தி!






# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண விவரம்

கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு மற்றும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். அந்தப் பயண விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| **28-08-2023 திங்கள்கிழமை** | | |
| காலை 11.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| இரவு 7.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலை, பெரம்பலூர் | அரியலூர் & பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| **29-08-2023 செவ்வாய்க்கிழமை** | | |
| காலை 10.30 மணி | கழுதூர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் | கடலூர் கிழக்கு & மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |

அன்பகம், சென்னை – 18. நாள் : 25–08–2023.

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி

# கழக விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் விவசாய கண்காட்சி - விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்!

## மாநில விவசாயத் தொழிலாளர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்! அன்னியூர் சிவா அறிவிப்பு!

*சென்னை, ஆக.28-*

*தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 26. 08.2023 சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் மாநில செயலாளர் அன்னியூர் சிவா தலைமையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:*

*தீர்மானம்1:*

*திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 'திராவிட மாடல்' ஆட்சியில் நித்தமொரு புத்தம் புதிய மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், சுதந்திர திருநாளை முன்னிட்டு 15.8.2023 சென்னை கோட்டைக் கொத்தளத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகையில், சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கடிய காட்சி ஒன்று ஓலா, ஊபர், ஸ்விஜி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனப் பணியாளர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.*

*ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கான ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தில் தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.*

*மேலும், ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.*

*சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் 25 கோடி ரூபாய் செலவில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா" ஒன்று அமைக்கப்படும்.*

*திட்டங்கள் இல்லாத நாளே இல்லை என செல்லக்கூடிய வகையில் அரசு அறிவிக்கும் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய் சேர்க்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அரசு ஊழியர்கள். ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள். அந்த சக்கரம் வேகமாக சுழல்வதும், மெதுவாக சுழல்வதும், அரசு ஊழியர்களின் கையில் தான் உள்ளது. அந்த கைகள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அப்போது தான் வேகம் அதிகமாகும் என்பதை எப்போதும் உணர்ந்த திராவிட மாடல் அரசு நடப்பாண்டுகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங்களை நிரப்பும் என ஏழை எளிய மக்களுக்கான - தொழிலாளர் களுக்கான நலத் திட்டங்களை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது.*

*தீர்மானம் 2:*

*கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியையும் இணைத்து "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்" நடத்திட உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி.*

*தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள், 'தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை பட்டித்தொட்டி முதல் பட்டினக்கரை வரையென அனைத்து இடங்களிலும் எழுச்சியுடனும், சிறப்புடனும் கொண்டாடிட வேண்டும் என்றும், நூற்றாண்டு கொண்டாட்டத்தில் திமுக விவசாயத் தொழிலாளர் அணியையும் இணைத்து "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்" தமிழகம் முழுவதும் நடத்திட வேண்டுமென உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கு, திமுக விவசாயத் தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.*

*தீர்மானம் 3*

*விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" சிறப்பாக கொண்டாடிடுவோம்.*

*விவசாயத் தொழிலாளர் அணியின் சார்பாக அனைத்து கழக ஒன்றியத்திலும் நவீன தொழில்நுட்பங்கள். விவசாய திட்டங்கள் மற்றும் கூட்டுறவு வங்கியின் பயிர் கடன்கள் குறித்த விழிப்புணர்வு முகாம். வேளாண்மை அதிகாரிகளை கொண்டு நடத்த வேண்டும்.*

*விழிப்புணர்வு முகாம் குறித்த விளம்பரங்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஒலி பெருக்கி அறிவிப்பு, செய்திதாள் விளம்பரங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலமாக செய்ய வேண்டும்.*

*முகாம்களில் பங்குபெறும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மரக்கன்றுகள் மற்றும் விதைப்பந்து பைகளுடன் தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு செய்த தொலைநோக்கு திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கிட வேண்டும்.*

*மாவட்டத்திற்கு ஒரு இடத்தில் என பல்வேறு விவசாய முறைகள் அதன் மூலம் மகசூல் குறிந்த மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் விவசாயத்திற்காக முன்னோடி திட்டங்கள் பற்றிய விளக்கங்களின் தொகுப்புகள் அடங்கிய விவசாய கண்காட்சி நிகழ்ச்சி செப்டம்பர் மாதத்தில் நடத்த வேண்டும்.*

*கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் நடைபெறும் நாட்கள் குறித்த பட்டியலை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளதால் ஆகஸ்ட் மாதம் இறுதி வாரத்திற்குள் கண்காட்சியின் விவரத்தை அணிச் செயலாளரிடம் தெரிவிக்க வேண்டும் .*

*அனைத்து உழவர் சந்தைகளிலும் தேவைப்படும் கூடுதல் வசதிகளை விவசாயத் தொழிலாளர் அணியின் சார்பாக செய்துதரும் வகையில் முக்கிய கழக நிர்வாகிகளைக் கொண்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும்.*

*விவசாயிகளுக்காக 'நான் விவசாயி ' என்ற செயலியை உருவாக்கி அதில் விவசாய திட்டங்கள் காலநிலை குறித்த அறிவிப்புகள் மற்றும் சந்தைகளின் விலை நிலவரங்கள் குறித்த அறிவிப்புகள் ஆகியவை இடம் பெறும் வகையில் அமைக்கப்பட வேண்டும். இந்த செயலியானது முதலமைச்சர் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் ஆகியோர் மூலமாக துவக்கி வைக்கப்பட வேண்டும்.*

*என தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர்அவர்கள் "தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை" விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் தமிழகம் முழுவதும் கொண்டாட வேண்டுமென உத்தரவிட்டதற்கிணங்க தத்தமது மாவட்ட செயலாளர்களின் ஆலோசனை பெற்று தலைமைக் கழகத்தால் மேலே குறிப்பிட்டபடி கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டுமென தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.டி.எஸ். மணி

**ஆகஸ்ட் 28 (1993)**



**செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க. நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.**

**செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அன்பில் பொய்யாமொழி

**ஆகஸ்ட் 28 (1999)**



**திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.**

**தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.**

**1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்!"

திமுக.க. தலைவராகப் பொறுப்பேற்று ஐந்தாண்டுகள் முடிந்து, ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தலைவர் தளபதிக்கு முதலில் கழகத் தொண்டர்கள் சார்பாக வாழ்த்துக்களை கூறிக் கொள்வோம்.

மகாகவி பாரதியின் பாடலைச் சற்று மாற்றி எழுதி "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம். எங்கள் பைந்தமிழ்-நாடென்று தோள் கொட்டுவோம்"- என்று பாட வேண்டிய கட்டாயம் நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. காரணம், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற ஒரு சாமானியர், ஆளுநர் மாளிகையில் பதவி பொறுப்பு ஏற்ற நாள் அன்றே, கோட்டையின் வாசலைத் திறந்து உள்ளே சென்று கால் பதித்த பின், சாதனையாளராக மாறித் தமிழ்நாட்டு மக்களுக்காகப் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியவராய் அற்புதங்கள் பல படைத்து வருகிறார். அந்தக் கோபாலபுரக் குடில் மைந்தன் படிப்படியாக, அதே நேரத்தில் அடுக்கடுக்காக -அதிசயமிக்கதாய், ஆரவாரமில்லாத வகையில், மலை போல் தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டி ஜெயபேரிகை கொட்டி முழங்கி வருகிறார்.

எவரும் எண்ணாத, எழுதிப் பார்க்காத,செய்யத் துணியாத மக்களுக்கான நலத் திட்டங்களையெல்லாம் தமது அறிவுரை மிக்க அதிகாரிகள் குழுவுடன் கலந்தாலோசனை செய்வதிலும், திட்டங்கள், சட்டங்கள் நடைமுறைப்படுத்திட முடிவெடுப்பதிலும், தீவிர முனைப்புக் காட்டி, வழிவகுத்து வருகிறார்.

அப்படி அவர் தீட்டிய பொற்காலத் திட்டங்களில் ஒன்றுதான், இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு முழுவதும் அரசு பள்ளிகளில் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் திட்டம் என்பதாகும். இதனைத் திருவாரூர் பெருமை பேசும் திருக்குவளையாம் கலைஞர் எனும் சூரியன் உதித்த மண்ணில் தொடங்கி வைத்து, தமிழ்நாடு எங்கும் விரிவு படுத்தியுள்ளார் நமது முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப் படுத்திடும் நோக்கமாகத் தமிழ்நாட்டிலுள்ள 31,008 பள்ளிகளில், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 17 லட்சம் அரசுப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையிலுள்ள அவர் படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்குக் இத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பெருமை சேர்த்திருக்கிறார் முதல்வர்.

காலை உணவுத் திட்டத்தின் ஐந்து நோக்கங்களாகத் தளபதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

(1)மாணவர்கள் பசி இல்லாமல், பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும்.

(2)ஊட்டச்சத்துக் குறைபாட்டால், பாதிக்கப்படாமல் அந்த குழந்தைகள் இருக்க வேண்டும்.

(3)இரத்தசோகை என்ற குறைபாட்டை நீக்க வேண்டும்.

(4)மாணவர்களுடைய வருகைப் பதிவை அதிகரிக்க வேண்டும்.

(5)வேலைக்கு செல்கின்ற தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைக்க வேண்டும்.

இந்த ஐந்து நோக்கத்தைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் நம்முடைய இலட்சியம். இதனை. முழுமையாக அடைந்தே தீருவோம், அதில் எந்தச் சந்தேகமும் கிடையாது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு." எனும் வள்ளுவரின் குறள் உணர்ந்து, நாட்டு மக்களை நாடி பிடித்துக் காப்பாற்றிடப் பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டிச் செங்கோலாட்சி செய்து வருகிறார் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின்.

"ஈ என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று; கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர் கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று; "என்பன போன்ற பொன்னே போல் போற்றும் நன்மொழிக் களஞ்சியப் புறநானூறாகச் சிற்றம்பலம் ஏறிச் சிறப்புகள் செய்து வருகிறார் அந்தத் திருக்குவளை வாரிசு பெற்ற பேரன்.' புவனம் பேசிடப் புத்தெழில் தளும்பிடக் கல்விக் கூடங்களில் கவனம் பதித்துள்ளார்.சிறார்களுக்குக் கல்வி அளிப்பது மட்டுமல்ல; கடும்பசி போக்கிடச் சிற்றுண்டி அளித்துப் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார் முத்துவேலரின் பேரனான அவர். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அபய குரலாக ஓங்கி எழுப்புவதால், அவர் அறச் சான்றோனாக காட்சியளிக்கிறார்

**(கழகத் தலைவர் பொறுப்பேற்ற நாள் இன்று - 28.8.2018)**



"யான் இரப்பவை பொருளும்,பொன்னும், போகமும் அல்ல; நின்பால் அருளும், அன்பும், அறனும் மூன்றும்".... என அமைச்சர் பெருமக்களை:அரசு பணியாளர்களை; கழகத் தொண்டர்களை பொதுமக்கள் களத்தில் இறங்கி வேலை செய்ய நாளும் கட்டளையிட்டு, கடமையை ஆற்றிட வேண்டிப் பரிபாடல் வரிகளாகப் பரிணமிக்கிறார்.

அவர் சாதாரண மனிதர்தாம்: மிக, மிக, மிகச் சாமானிய சமுதாயத்தில் பிறந்து-சஞ்சீவி போல் வளர்ந்து சாதனை பல நிகழ்த்திய கலைஞரின் மடிதவழ்ந்து; தியாகத் தழும்புகள் காய்த்தத் தோள் பற்றிக் கிடந்து - அறிவுடை ஆன்றோரால் அடையாளம் காட்டப்பட்ட அருந்தமிழ்ப் புதல்வர்தாம் மு.க.ஸ்டாலின்.

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர் தலை யுலகம்".... என்று புறநானூறு கூறுகிறது பூந்தமிழ் வாக்கு. எனவே,ஆள்வோர் அதனைச் செய்ய எண்ணி விழைய வேண்டும் .அவ்வழியில் தளபதியோ, ஆட்சிக் கட்டில் ஏறி, மக்களின் மனத்தில் ஆள்வோனாக மாறிக் காவலனாக இருந்து வருவதுடன், கடமையாற்றும் காதலனாகவும் கசிந்துருகிக் கை தூக்கி விடுவதில் தலை நிமிர்ந்து நிற்கிறார்.

"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே பிறவும் எல்லா ஓர் ஒக்கும்மே "...எனக் காலமறிந்து கடமையாற்றுகிறார் தளபதி. "யாதும் ஊரே; யாவரும் கேளிர்"... என்ற கணியன் பூங்குன்றனாரின் வைர வரிகளுக்கு ஏற்ப, மாந்தர் குல உறவுகளுக்காகத் தாகத்தைத் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தலாக விருந்து படைக்கிறார். அரசியலில் வெஞ்சமர்ப் புரியும் பகைவர்களாக எவர் இருந்தாலும், மக்கள் பணியில் ஒரு தாய் மக்களாக எண்ணி,அவர்கள் அனைவரையும் அரவணைத்துப் பணியாற்றுவதில். அஞ்சுகத் தாயின் பேரனாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

"இன்னாது அம்ம இவ்வுலகம்; இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே". என்று துன்ப நோயகற்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போல் நீதி வழங்குவதில் ஆளுமை படைக்கிறார்.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும், அல்லது செய்தல் ஓம்புமின்"- என்று அரசுக்கு விருட்சமாக விரிந்துயரந்து, விசிறியாகி வேர்வை துடைக்கும் வேந்தராக அவதாரம் எடுத்துள்ளார்.

தீயினுள் தென்றல் நீ,; பூவினுள் நாற்றம் நீ,; கல்லுனுள் மணியும் நீ, சொல்லுனுள் வாய்மை நீ; அறத்தினுள் அன்பும் நீ;மறத்துனுள் மைந்து நீ; வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ; வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களும் அளியும் நீ; அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ "...என்று பரிபாடல் மூலமாக, தாம் வணங்கும் தெய்வத்தின் பெருமையாகக் கடுவன் இளம் வெயினார் கலங்கிக் காதலித்துக் கவிதை வடித்திருப்பாரே.

அதனைப் போல, தமிழ் மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து உயர்ந்து ததும்பிச் சிரபுஞ்சியாய்ப் பேசப்படுகிறவர்தாம் இன்றைய முதல்வர் தளபதி.

